## கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை - 2022

-----------------------------------------------------------------

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 5,040,553 தொகை செலவிடப்பட்டு பிரதேச சபை நூலகத்தின் மேல்மாடி நிர்மாணிக்கப்பட்ட செலவினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டு இறுதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருக்காத செலுத்த வேண்டிய செலவுகள் ரூபா 1,312,783 தொகை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,109,925 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

#### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணி உறுதிகள், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள், நிலஅளவைப் படம், | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு |

| | | |
|---|---|---|
| விரிவான அட்டவணைகள் ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 58,247,274 தொகைக்கான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | எடுக்கப்படும் என. | மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நி.பி. 272.1 | சபையினால் பேணப்பட்டு வருகின்ற நடைமுறைக் கணக்கில் இருந்து செலுத்தப்பட்டிருந்த ரூபா 427,020 தொகை பெறுமதியான கொடுப்பனவு உறுதிச் சீட்டு காணாமல் போதல் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | (ii) நி.பி. 571 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 104,342 இற்கான வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினால் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4,683,492 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 515,070 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. வீதவரி மற்றும் வரி | 1,025,485 | 922,123 | 828,320 | 808,959 | 879,515 | 904,072 | 951,991 | 715,156 |
| ii. வாடகை | 4,195,200 | 1,643,740 | 1,643,524 | 376,498 | 1,591,800 | 1,580,920 | 1,538,572 | 376,282 |
| iii. அனுமதிப் பத்திரக் கட்டணம் | 330,100 | 484,510 | 543,360 | 38,325 | 130,000 | 117,000 | 11,700 | 97,175 |
| iv. ஏனைய வருமானங்கள் | 7,798,200 | 94,600 | 11,564,821 | 660,146 | 6,520,000 | 7,789,310 | 2,210,000 | 12,130,367 |
| மொத்தம் | 14,068,985 | 3,144,973 | 14,580,025 | 1,883,928 | 9,121,315 | 10,391,302 | 4,817,563 | 13,318,980 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 715,156 தொகையாகக் காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு அம் மீதி ரூபா 808,959 தொகையாகும். | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 134(1) இற்கு இணங்க சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட இடங்களை இனங்கண்டு 2020 ஜனவரி 31 திகதிய 2161 இலக்கங் கொண்ட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டிருந்த, வீதவரி அறவீடு செய்வதற்காக 2021 ஒக்தோபர் 05 திகதி சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் வீதவரி ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக மாகாண ஆளுனரின் அங்கீகாரம் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியளவில் சபைக்கு சொந்தமான கடை வாடகை செலுத்தும் 10 கடையறைகளுக்கு மற்றும் தரை வாடகை செலுத்தும் 06 கடையறைகளில் இருந்து ரூபா 184,996 இற்கான நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/2010/01 மற்றும் 2010 திசெம்பர் 27 திகதிய சுற்றறிக்கையின் 06 ஆவது பந்திக்கு இணங்க 2022 நவம்பர் 30 திகதியளவில் சபைக்கு சொந்தமான கிரிந்த பொதுச் சந்தையின் புதிய வர்த்தக தொடர்கட்டிடம் மற்றும் பஸ் நிலையம் ஆகியவற்றில் காணப்பட்ட 32 கடையறைகளின் வாடகைத் தொகை பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டு அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கு முடியுமாக உள்ளது என. | விரைவாக கடை வாடகை பெறுமதி மதிப்பீடு நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 126(viii) இன் பிரகாரம் நகர்சார் அல்லாத பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் கட்டிடங்கள், கட்டிட நிர்மாண வேலைகள் தொடர்பாக திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி பிரமாணங்களில் உள்ளடங்கிய துணை விதிகள் விதிக்கப்பட்டு இருக்காததுடன் 2022 திசெம்பர் 06 திகதி தெரிவு வெளிக்கள கணக்காய்வுப் பரிசோதனையின் போது அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்த 06 நிர்மாண வேலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | துணை விதிகளின் வரைவுகள் மற்றும் அதற்குரிய விண்ணப்பங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும் வெளிக்கள கணக்காய்வு பரிசோதனையின் போது இனங்கண்டிருந்த 06 நிர்மாணவேலைகளுக்குரிய அங்கீகாரத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள் சபைக்கு சமர்ப்பிக்கும் படி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அதன்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த நகர்சார் எல்லைக்குள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த அல்லது நிர்மாணிக்கப்படுகின்ற 06 கட்டிடங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி | குறிப்பிட்ட கட்டிடங்களுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதா என உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள் சபைக்கு விரைவாக சமர்ப்பிக்கும் படி குறிப்பிட்ட நிர்மாணிப்பாளர்களுக்கு கடிதங்கள் | வர்த்தமானி அறிவித்தல்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கட்டளைகள்/ பிரமாணங்களில் அடங்கியுள்ள 2021 ஜூலை 08 ஆந் திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளுக்கு இணங்க சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுப்பப்பட்டுள்ளது எனவும் அதன் படி தேவையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் | |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலப் பகுதியல் கட்டிட நிர்மாண வேலைகளுக்காக 186 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் இணக்கச் சான்றுகள் பெற்றிருந்தது 31 கட்டிடங்களுக்காக மாத்திரமே. | இணக்கச் சான்றுகள் பெற்றுக் கொள்ளாத கட்டிட அனுமதிப் பத்திர உரிமையாளர்களுக்கு அச் சான்றிதழை விரைவாக பெற்றுக் கொள்ளும் படி நிர்மாண வேலை இது வரை பூர்த்தி செய்யப்படாத வீட்டு உரிமையாளர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்திற்கு இணங்க கட்டிட அனுமதிப் பத்திரம் நீடித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது என. | வர்த்தமானி அறிவித்தல்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | மின்சக்தி மற்றும் வலுச் சக்தி செயலாளரின் PR/01/01 மற்றும் 2010 ஆகஸ்ட் 17 திகதிய சுற்றறிக்கைக்கு இணங்க வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் சபை நிதியத்தில் இருந்து ரூபா 211,935 இற்கான செலவொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | விண்ணப்பித்த போதிலும் பணம் கிடைத்திருக்கவில்லை என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான முச்சக்கர வண்டியை திருத்தவேலை மேற்கொள்வதற்காக ரூபா 194,550 இற்கான குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்தில் இருந்து திருத்த வேலை மேற்கொள்ளாமல் பொறியியலாளர் ஒருவரின் பரிந்துரை இன்றி ரூபா 216,800 கூடிய பெறுமதி ஒன்று சமர்ப்பித்திருந்த நிறுவனத்தின் மூலம் திருத்த வேலை மேற்கொண்டிருந்தது. | திருத்த வேலைக்கு செலவிடப்படும் காலம் மற்றும் பூர்த்தி செய்யப்பட்டு பெற்றுக் கொள்ளப்படும் காலம் மற்றும் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு காணப்படும் விஷேடத்துவம் ஆகிய விடயங்களின் காரணமாக தனியார் மோட்டார் நிறுவனம் ஒன்றில் இருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலை தெரிவு செய்யப்பட்டது என. | மிகவும் அனுகூலமான கூறுவிலை தெரிவு செய்யப்பட வேண்டும். |